மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.
O.S.81/2023

வாக்குமூலம்: வா.சா.2 – கருப்புச்சாமி
08.10.2025:

**சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு, பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை** : எனக்கு சாட்சி சொல்வதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை, 1 ஆம் வாதி அழைத்ததன் பேரில் சாட்சி சொல்ல வந்தேன். இந்த வழக்கில் சர்வே எண்.23/2O தான் பாதை என்றால் சரிதான். வாதிக்கு சர்வே எண்.23/2O ல் பாதை உரிமை உள்ளது என்றும், மேற்படி பாதையை இடையூறு செய்யக்கூடாது என்றும் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். பாதைப் பொறுத்து தனிப்பட்டா உள்ளது என்றால் சரிதான். மேற்படி பட்டா எண்.404 ஆகும். மேற்படி பட்டா 13 நபர்கள் பேரில் உள்ளது. மேற்படி பாதை நிலத்திற்கு சம்பந்தமாக எனக்கு எவ்வித பட்டாவும் இல்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் என்னையும், எனது மனைவியையும் மற்ற பட்டா தாரர்களையும் இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். என்னிடம் யாரும் இடையூறு செய்யவில்லை. பாதை எங்கிருந்து எங்கு செல்கிறது என்றால் வாகரை சாலக்கடையிலிருந்து முருகசாமி கருப்பாத்தாள் நிலம் வரை செல்கிறது. பாதைக்கு வடக்கே பிரதிவாதியுடைய மாமனார் நிலம் உள்ளதா என்றால் சரிதான். மேற்படி நிலத்திற்கு சர்வே எண்.23/2L என்றால் அதுப் பற்றி எனக்குத் தெரியாது. பிரதிவாதியின் மாமனாரின் நிலத்திற்கு கிழக்கே பிரதிவாதியின் கணவர் பெயரில் நிலம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி நிலத்திற்கு சர்வே எண்.23/2M என்றால் சரிதான். மேற்படி பிரதிவாதியின் கணவரின் நிலத்திற்கு கிழக்கே பிரதிவாதியின் நிலம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி நிலத்தின் சர்வே எண்.23/2N என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்ட சங்கதிகள் எல்லாம் யார் மூலமாக தெரியும் என்றால் மேற்படி விபரங்கள் எல்லாம் எனக்கு நேரடியாக தெரியும். மேற்படி நிரூபண வாக்குமூலத்தில் வழக்கு வாகன வழிப் பாதையை பிரதிவாதி பயன்படுத்துவதில்லை என்று நான் தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் இல்லை, பிரதிவாதி வேறு பாதை உள்ளது. அதன் வழியாகத் தான் சென்று வருகிறார். பிரதிவாதி அவர்கள் நிலத்திற்கு சர்வே எண்.23/2O வழியாக வரலாம் என்றால் சரிதான். சர்வே எண்.23/2N லிருந்து பிரதிவாதியால் அமைக்கப்பட்ட பாதை வழியாக தெற்குப் பக்கத்திலிருந்து, கிழக்காக செல்லும் சர்வே எண்.23/2O பாதைக்கு செல்ல

முடியும் என்றால் சரிதான். சர்வே எண்.23/20 பாதை வழியாக அங்கிருக்கும் கோவிலுக்கு செல்லலாம் என்றால் சரிதான். மேற்படி பாதை வழியாகத் தான் பிரதிவாதி அவரது குடும்பத்துடன் மேற்படி கோவிலுக்கு சென்று வருகிறார் என்றால் எனக்குத் தெரியாது. சர்வேயர் வரைபடத்தை யார் என்னிடம் காட்டினார் என்றால் மணியக்காரர் காட்டினார். மேற்படி சர்வேயர் வரைபடம் நிரூபண வாக்குமூலத்தில் வாதிகளால் காண்பிக்கப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் எல்லோரும் காண்பித்தார்கள். எனது நிரூபண வாக்குமூலத்தில் சர்வேயர் வரைபடத்தில் பாதையின் அகலம் தவறாக குறைவாக காட்டி காண்பிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அதனை நிரூபிக்க ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்கிலிருந்தும், கிழக்கிலிருந்தும் பாதை வருகிறது, தெற்கிலிருந்து திரும்பும் போது பாதை குறைவாக குறிப்பிடப்பட்டுள்ளது. சர்வே எண்.23/20 பாதையானது பிரதிவாதி நிலத்திற்கு மேற்கே உள்ளது என்றால் சரிதான்.

மறு விசாரணை : இல்லை.

Taken down by me in open court and
read over to the witness in Tamil and
acknowledge by him/her to be correct

APOORVA S

Digitally signed by APOORVA S
Date: 2025.09.26 23:16:19 +0530

District Munsif,
Palani.